*THE IMPORTANT THING IS THE FAMILY IF YOU CAN KEEP THE FAMILY TOGETHER AND THAT THE BACKBONE OF OUR WHOLE BUSINESS*

# காக்கும் கரங்கள்

**TVPA (Reg No.: 32/97) - TAMILNADU**

with an object of

***"to provide immediate financial aid to the family incase of death of Kaakkum Karangal Members"***

தமிழ்நாடு வீடியோ & போட்டோகிரபர்ஸ் (TVPA) சங்கத்தின் மூலம் **"காக்கும் கரங்கள்"** என்ற பெயரில் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது, இத்திட்டம் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட சங்கத்திலும் செயல்படுத்தப்படும். எந்த ஒரு மாவட்ட சங்கத்தையும் இத்திட்டத்தில் இணையும்படி கட்டாயப்படுத்துதல் மாட்டாது. ஒரு மாவட்ட சங்கம் இத்திட்டத்தில் இணைய விரும்பினால் மட்டுமே இணைந்து கொள்ளலாம். இத்திட்டத்தினால், நமது தொழில் சார்ந்த கலைஞர்களிடம் ஈகை குணம், ஒற்றுமை, ஒருமித்த கருத்து நிலவுவது மட்டும் அல்லாமல், அவர்களது குடும்ப வாழ்வாதார பாதுகாப்பாக கருதும், இறப்புக்கு பின் அவர்களது குடும்ப பாதுகாப்புக்கு உதவி செய்யமுடியும்.

இத்திட்டத்தின்படி, தமிழ்நாடு வீடியோ & போட்டோகிராபர்ஸ் சங்கத்தின் அங்கீகாரம் பெற்ற அனைத்து மாவட்ட சங்கத்திலும் உள்ள உறுப்பினர்களைக் கொண்டு இழப்பு நிதியாக தலா ரூபாய் 300/- பெற்று, ஆரம்ப கட்டமாக 5000 உறுப்பினர்கள் இத்திட்டத்தில் இணைந்தவுடன் இத்திட்டம் செயல்பட தொடங்கிவிடும். இத்திட்டத்தின் மூலம் உயிர் துறந்த உறுப்பினர்களின் குடும்ப பாதுகாப்பு நல நிதி வழங்கப்படும். இத்திட்டப்படி தலா நான்கு குடும்பத்துக்கு ரூபாய் 3,00,000/-வீதம் கொடுக்கப்படும்.

நமது தொழில் சார்ந்த சக **கலைஞர்கள் மறைவுக்கு அஞ்சலி செலுத்த, நாம் சமர்பிக்கும் பூமாலைக்கான செலவின தொகையை ஒன்று திரட்டி பெருந்தொகையாக கொடுத்து உதவுவதே இதன் நோக்கமாகும். "இத்திட்டத்தின் பலன் (பணம்) தனக்கு கிடைக்கும் என்பதை காட்டிலும், தன்னை சார்ந்த சக புகைப்பட கலைஞர்கள் குடும்பத்திற்கு கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணமே"** இத்திட்டம் உருவாக முக்கிய காரணமாகும். இந்த நல்ல எண்ணத்துடன் ஒவ்வொருவரும், இச்சேவை திட்டதில் இணைந்தால் மட்டுமே முழு பலன் பெறமுடியும்.

இத்திட்டத்தை பற்றி விளக்கமாக காண்போம்.

திட்டத்தின் பெயர் - TVPA (w)in **"காக்கும் கரங்கள்"**

- இத்திட்டம் மூலம், உறுப்பினர்களான விருப்பமுள்ள அனைத்து தொழில் கலைஞர்களின் உதவியுடன் ,உயிர்துறந்த உறுப்பினர்களின் குடும்பத்திற்க்கு உதவும் "உன்னதமான திட்டம்" இத்திட்டம் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டத்திலும் செயல்படும்.

- இத்திட்டம் மாநில சங்கத்தில் இணைந்துள்ள, அனைத்து மாவட்ட சங்க உறுப்பினர்களுக்கும், மாவட்டசங்கத்தில் இணைந்துள்ளதாலுகா, கிளை, வட்டார சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் கிடைக்க பெறும்.

- இத்திட்டத்தில் இணைய விரும்புபவர் வீடியோ & புகைப்பட துறைசார்ந்த தொழில்புரிபவராக இருக்க வேண்டும். தங்கள் அங்கம் வகிக்கும் சங்கத்தில் சந்தா நிலுவை இல்லாமல் இருக்க வேண்டும். ஆரம்ப கட்டமாக இத்திட்டத்தில் இணைவதற்கென்று எந்தவித வயது வரம்பும் நிர்ணயிக்கப்படவில்லை. அனைத்து வயதினரும் இத்திட்டத்தில் இணையலாம்.

- காக்கும் கரங்கள் திட்டத்தின் உறுப்பினர்களது பங்களிப்புத் தொகையாக தலா ரூ.300/- பெற்று, 5000 நன்கொடையாளர்கள் சேர்ந்த பிறகு, இத்திட்டம் அமுலுக்கு வரும்.

- 5000 உறுப்பினர்களின் நன்கொடை பங்களிப்பு தொகை 5000X300 = ரூ.15,00,000ல் இருந்து காக்கும் கரங்கள் திட்டத்தின் உறுப்பினர்களது குடும்ப நல பாதுகாப்பு நிதியாக ஒரு உறுப்பினரது மறைவிற்கு பின் அவரது குடும்பத்திற்கு தலா ரூ.3.00,000/-ம் வீதம் நான்கு உறுப்பினர்களின் குடும்பத்திற்கு கொடுக்கப்படும். ரூ.15,00,000ல் மீதம் உள்ள ரூ.3,00.000/-த்தை அவசர கால இருப்பு வைப்புநிதியாக வைக்கப்படும்.

- குடும்ப நல பாதுகாப்பு தொகையானது, அவரது குடுப்பத்தை சார்ந்த நியமிக்கப்பட்டவரிடம் (Nominee) உறுப்பினரது மறைவு தினத்தன்றே வழங்கப்படும்.

- உயிர்துறந்த நான்கு காக்கும் கரங்கள் திட்டத்தின் உறுப்பினர்களது குடும்பத்துக்கு குடும்ப நல பாதுகாப்பு தொகை கொடுத்த பிறகு, காக்கும் கரங்கள் திட்டத்தின் உறுப்பினர்கள் 3 நாட்களுக்குள் மீண்டும் ரூ.300/- செலுத்தி தங்களது கணக்கினை புதுப்பிக்க வேண்டும்.

- காக்கும் கரங்கள் திட்டத்தின் நான்கு உறுப்பினர்கள் மறைவு வரை உறுப்பினர்களிடம் இருந்து எந்த விதமான தொகையும் வசூலிக்கப்பட மாட்டாது.

- குடும்ப நல பாதுகாப்பு தொகை செலுத்த ஏதுவாக மாநில சங்கம் மூலமாக App உருவாக்கப்படும். இதன் மூலம் மாவட்ட சங்க ஒப்புதலோடு பணம் செலுத்திக்கொள்ளலாம்.

- காக்கும் கரங்கள் திட்டத்தில் உறுப்பினர்களாக இணைய விருப்பமுள்ளவர்கள் கண்டிப்பாக தங்களது மாவட்ட சங்கத்தில் உறுப்பினர்களாக இருத்தல் அவசியம்.

- மாவட்ட சங்க உறுப்பினர் அல்லாதவர்கள் முதலில் மாவட்ட சங்கத்தில் உறுப்பினரான பின்பே காக்கும் கரங்கள் திட்டத்தில் இணைய முடியும்.

- காக்கும் கரங்கள் திட்டத்தின் உறுப்பினர்கள் 3 நாட்களுக்குள் மீண்டும் ரூ.300/- செலுத்தி தங்களது கணக்கினை புதுப்பிக்காதாவர்கள், அபராத தொகை செலுத்தி, தங்களை புதுப்பித்து கொள்ள வேண்டும். இவ்வாறு புதுப்பிக்காதவார்கள், இத்திட்டதில் இருந்துமுன் அறிவிப்பு கொடுத்து விலக்கப்படுவார்.

- **காக்கும் கரங்கள்** இத்திட்டத்தில், ஆயுள் காப்பீட்டு பிரிமியத் தொகையை விடகுறைவான தொகை (ரூ.300/-) செலுத்தினால் போதுமானது.

- இத்திட்டத்தில் சேரும் உறுப்பினர்களுக்கு மருத்துவ சான்றிதழ் தேவையில்லை.

- காக்கும் கரங்கள் திட்டத்தின் உறுப்பினர்களுக்கு குறைந்தபட்ச நடைமுறைகளுடன், குடும்ப நல பாதுகாப்பு தொகை (Death Claim) வழங்கப்படும்.

- அனைத்து வகையான மரணத்திற்கும் இத்திட்டம் பொருந்தும்.

- காக்கும் கரங்கள் திட்டத்தின் உறுப்பினர் இறக்கும் பட்சத்தில், உறுப்பினர்களது குடும்பத்தாரிடம் இருந்து பெறப்படும் சான்று அனைத்தும், மாவட்டசங்கம் மூலமாகவே வழங்கவேண்டும்.

- எதிர்காலத்தில் காக்கும் கரங்கள் திட்டத்தை செயல்படுத்த மாநில சங்கம் மூலம், ஒரு தனிக்குழு உருவாக்கப்படும். மாவட்ட சங்கம் மூலமாக மாவட்டத்திற்கு ஒரு ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்படுவார். இவர்களைகொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

- அதுவரை மாநில, மாவட்ட நிர்வாகிகளே, இத்திட்ட நிர்வாகிகளாக செயல்படுவார்கள்.

- எதிர்காலத்தில் இத்திட்டத்தின் விரிவாக்கம் அனைத்தும் தமிழ்நாடு வீடியோ & போட்டோகிராபர்ஸ் அசோசியேசனின் பொதுக்குழுவில் எடுக்கப்படும் தீர்மானங்கள் அடிப்படையில் இத்திட்டம் செயல்படும்.

மேலும் காக்கும் கரங்கள் திட்டம் தொர்பாக தகவல் பெற,

**தமிழ்நாடு வீடியோ & போட்டோகிரபர்ஸ் (TVPA) சங்கத்தை** நாடவும்.

நன்றி.

வணக்கம்.